1998 ஏப்ரல் 15]

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக விவசாயிகளிடத்திலே, தீவன விலை உயர்ந்துவிட்ட காரணத்தால், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பது நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வந்தது. அதை இந்த அரசு செய்தது சரி. அதேநேரத்தில், இந்தப் பால்விலை உயர்வு நுகர்வோர்களை கடுமையாகப் பாதித்திருக்கிறது. குறிப்பாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், அரசுத் தரப்பிலிருந்து விலையைக் குறைக்க வேண்டுமென்றால் நடவடிக்கை உடனடியாக எடுப்பதில்லை. அதேநேரத்தில் விலையேற்றம் என்றால் நேரடியாக, உடனடியாக அமல்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. பால்விலை உயர்வின் மூலமாக, அரசின் அறிவிப்புக்குப் பிறகு, காப்பி ஓட்டல், டீக்கடை வைத்திருக்கக்கூடியவர்கள் விலையை உயர்த்தியிருப்பதால், தொழிலாளர்கள் முதற்கொண்டு வசதி படைத்தவர்கள் வரை இந்த உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்து, விலையேற்றத்தின் காரணமாக இருக்கிற பாதிப்பைக் கருத்தில் கொண்டு, விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. சுதர்சனம் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி அவர்களும் இங்கே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பின் வாயிலாக பால் விலையேற்றம் பற்றிய தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

முத்தாய்ப்பாக விலையைக் குறைக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஒரு வேளை திரு. சுதர்சனம் அவர்களும், பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும் இந்தக் கவன ஈர்ப்பை அளித்த காரணத்தால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே நம்முடைய திரு. பழனிசாமி அவர்களும் ஏற்கெனவே இந்த விலை உயர்வைத் தவிர்க்க முடியாது என்ற கருத்தைக் கட்சியின் சார்பிலே சொல்லியிருந்தாலும்கூட, அதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள விளைவுகளை எண்ணிப்பார்த்து, விமர்சனங்களை எண்ணிப்பார்த்து அவர்களும் இன்றைக்கு, அவர்களோடு இணைந்து, தன்னுடைய குரலை இங்கே உயர்த்தியிருக்கின்றார்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 15

முதலில் சில விளக்கங்களை நான் இங்கே தர விரும்புகின்றேன். கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று, சற்றொப்ப 20 இலட்சத்திற்கு மேற்பட்ட பால் உற்பத்தியாளர்கள், கிராமப்புற விவசாயிகள், அவர்களின் சார்பாக, அந்தப் பிரதிநிதிகள் எங்களிடத்திலே வலுவாக வாதிட்டு, கொள்முதல் விலை 1 ரூபாய் 50 காசு உயர்த்தப்பட்டது. கொள்முதல் விலை எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டதோ, அதே அளவுக்குத்தான் நுகர்வோருக்கு விற்பனை விலையும் நிர்ணயிக்கப்பட்டது. இதிலே ஆவின் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய். இந்தப் பத்து கோடி ரூபாயை நம்முடைய திரு. சுதர்சனம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய் போன்ற பொருள்களை, உபபொருள்களாக உருவாக்கி அதன் மூலமாக அவற்றை விற்று வருகின்ற வரவு 8 கோடி ரூபாய் என்ற அளவில் நிகர நட்டம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய். ரூபாய் 1.50-ஐ கொள்முதல் விலையில் உயர்த்தி, அதே ரூபாய் 1.50க்கு உயர்த்தி விற்பனை விலை நிர்ணயித்த நிலையில் 10 கோடி ரூபாய் நட்டம். அதிலே ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய் இவைவிற்பனை மூலமாக 8 கோடி ரூபாய் வரவு; நிகர நட்டம் 2 கோடி ரூபாய். அஃதன்னியில், இங்கே நம்முடைய, குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அடிக்கடி எடுத்துக்காட்டியதின் மூலம், அந்தக் காலத்தில், பத்தாண்டுகளுக்கு முன்பு, மாதவரம் பால் பண்ணையிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களை, அவ்வப்போது மீண்டும் மீண்டும் வேலையிலே சேர்த்துக்கொண்டுள்ளோம். இப்போதுகூட 314 பணியாளர்களை வேலையில் சேர்த்ததன் மூலமாக 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு மேலும் இழப்பு. எனவே, 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் நிகர இழப்பு, இப்போதே, இந்த நிலையிலேயே. அதாவது ரூ.1.50 கொள்முதல் விலையிலும் உயர்த்தி, ரூ.1.50 விற்பனை விலையிலும் நிர்ணயித்த இந்த நிலையில்கூட மொத்தம் 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் நட்டம் ஆகிறது.

முற்பகல் 10-50

இப்போது ஒன்றைச் சொன்னால், இதையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டக் கூடாது என்று கூறுவீர்கள். இருந்தாலும் உங்கள் நினைவுக்காக ஒப்பிட்டுக் காட்டுகின்றேன். ஆந்திராவில் ஒரு லிட்டர் 11 ரூபாய்தான். அதிலும் குறிப்பாக ஹைதராபாத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். பெங்களூரில் 10 ரூபாய் 50 காசுகள். ஆனால், பெங்களூர் தவிர்த்து கர்நாடகப் பகுதியில் எல்லா இடங்களிலும் 11 ரூபாய்.

திருவனந்தபுரத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். டில்லியில் 11 ரூபாய். இங்கே இந்த விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற நேரத்தில், உதாரணத்திற்கு ஒரு 50 பைசா குறைப்பதாக இருந்தால்கூட -- சென்னை நகரத்திலே ஒரு நாளைக்கு விற்பனையாகின்ற பால் 8 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர்கள். சென்னை தவிர்த்து வெளியூர்களில் விற்பனையாகின்ற பாலின் அளவு 6 இலட்சத்து 60 ஆயிரம் லிட்டர். மொத்தம் 14 இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர். 50 காசுகள் இதிலே குறைத்தால்கூட ஒரு நாளைக்கு நட்டம் 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்—365 நாளைக்கும் ஏறத்தாழ 27 கோடி ரூயாய் நட்டம். ஏற்கனவே இருக்கின்ற நட்டம் 3 கோடி ரூபாய். மொத்தம் 30 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இதைத் தாங்கக் கூடிய அளவில் ஆவின் நிறுவனம் இன்றைக்கு இல்லை என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். ஆனாலும், தேநீர் கடைக்காரர்கள் தேநீரின் விலையை உயர்த்தி விட்டார்கள் என்று நம்முடைய திரு. டி. சுதர்சனம் அவர்களும், நம்முடைய திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. லா. சந்தானம் அவர்களும் சொன்னார்கள். இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. தேநீர் கடைக்காரர்கள் எல்லாம் ஆவின் பால் வாங்கிதான் டீ போட்டார்கள் என்கிற உண்மை இப்போதுதான் எனக்குப் புரிகிறது. ஆனால் இன்று இந்த விலை உயர்வை வைத்துக்கொண்டு அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

வரியை நீக்கினால் விலை குறையும், தேங்காய் எண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், நல்லெண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், அவற்றின் விலைகள் குறையும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு விலை குறையவில்லை என்று நான் நம்புகிறேன். இருந்தபோதிலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக இன்றைக்கு உரையாற்றியவர்கள் தெரிவித்த கருத்துக்கள், பத்திரிகைகளிலே வந்துள்ள கட்டுரைகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது, 50 காசுகள் குறைத்து அதாவது — 11 ரூபாயிலிருந்து 10.50 காசுகள் என்ற அளவில் இனிமேல் பாலின் விலை நிர்ணயிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது இப்போது 11 ரூபாய் என்றிருப்பது 10 ரூபாய் 50 காசுகள் என்று ஆக்கப்படுகிறது. இப்படி ஆக்கினாலே 30 கோடி ரூபாய் இந்த ஆண்டுக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்த 30 கோடி ரூபாய் இழப்பை நிறுவனம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். இதுவரையிலும் கேள்வி நேரத்தின்போது அதிகாரிகள் குறிப்பிட்டதைத்தான் நான்

பேசிக்கொண்டிருந்தேன். எனவே, அரசு இதற்கு மானியம் தரும். எவ்வளவோ மானியம் தருகிறோம். அதோடு இந்த மானியத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசு மானியம் 30 கோடி ரூபாய் ஆவின் நிறுவனத்திற்கு வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, பாலின் விலை 10.50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த விலை நிர்ணயம் நாளை முதல் அமலுக்கு வரும். ஏற்கெனவே பணம் கட்டி அட்டைகள் வாங்கியிருந்தால், அடுத்த கார்டுகள் வாங்கும்போது இந்தப் பணம் சரி செய்து கொள்ளப்படும் என்பதையும் சொல்லி அதற்காக ஒரு விமர்சனமும் வேண்டாம் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகின்றேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1998

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல். 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.